**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>**
**முன்னிலை: திருமதி.பி.கே. தமயந்தி,எம்,ஏ.,பி.ல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் நாள் செவ்வாய்கிழமை**

**<u>இ.ம.எண். 8/2022 –இன்– இ.ம.6/2022 – இன் – அ.வ.எண்.43/2020</u>**

வசந்தா . . . மனுதாரர்/12 ம் எதிர்மனுதாரர்

**//எதிராக//**

1. சடையன் (இறந்தார்)
2. சகுந்தலா
3. பன்னீர்செல்வம்
4. சந்திரன்
5. தேவராசன்
6. நித்யா
7. சத்யா
8. தங்கேஸ்வரன்
9. செல்வி
10. லதா . . . எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இம்மனுவானது என் முன்பு 20.10.2022 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் / 12 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.Ra.அய்யாவு, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.தமிழ்செல்வன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் அபிடவிட்டில் கண்ட காரணங்களுக்காக

இ.ம.6/2022 மனுவில் 8.8.2022ம் தேதியில் இவ்வெதிர்மனுதாரர்களை பொறுத்து பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து மேற்படி வழக்கை மீண்டும் கோப்புக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட வேண்டுமென்று உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தரப்பு மனு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:**

நான் இம்மனுவில் மனுதாரர்/அசல் மனுவில் எதிர்மனுதாரர். எதிர்மனுதாரர் மனுதாரர் மீது விளம்புகை மற்றும் பாகப்பிரிவினை கோரி தாவா தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி வழக்கானது கடந்த 8.8.2022ம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும் மனுதாரர் ஆஜராகாததால் மேற்படி மனுவில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு மனுதாரர் தரப்பு வழக்கறிஞரை சந்தித்து மேற்படி மனு பற்றி விசாரித்த போது தான் மேற்படி மனுவில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரியவந்தது என்றும் மேற்படி தினத்தில் மனுதாரர் சமூகம் கோர்ட்டில் முன்னலையாகாதது போனஃபைடாக ஏற்பட்டதாகும். மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மனுவினை மீண்டும் கோப்பிற்கு எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. எனவே மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மறுப்புரை:**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல.மனுதாரருக்கு உண்மையிலேயே உடல்நிலை சரியில்லாமல் போயிருந்தால் எந்த மருத்துவமனையில் என்ன சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் மேற்படி சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ சான்றிதழ்களை இத்துடன் ஒப்படைத்திருப்பார். அவ்வாறு ஒப்படைக்காத காரணத்தினால் மேற்படி காரணங்கள் பொய் என்பது தெளிவாக தெரியவருகிறது. மேலும் மனுதாரர் அசல் தாவாவில்

ஏற்கனவே எக்ஸ்பார்ட்டியாக உள்ளார். அவ்வாறு இருக்கையில் அசல் மனு அனுமதிப்பதை பொருத்து இம்மனுதாரருக்கு எவ்வித இடையூறும் இல்லை. மேலும் மனுதாரர் அசல் மனுவில் எக்ஸ்பார்ட்டியானதை தொடர்ந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆனால் இம்மனுவுடன் எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த எதிர்மனுதாரருக்கு வீண் கஷ்ட நஷ்டத்தை கொடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின் பேரில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவு பிறப்பிக்க வேண்டும் என்று மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்ள் பரிசீலிக்கப்பட்டது.

**<u>4. இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே ஆகும்.</u>**

மேற்படி மனுக்களில் மனுதாரர் 12ம் மனுதாரர் என்றும், எதிர்மனுதாரர், மனுதாரர் மீது விளம்புகை மற்றும் பாகப்பிரிவினை கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கு கடந்த 8.8.2022 ல் வாய்தா போடப்பட்டிருந்த போது, மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்றும் அதனால் மனுதாரர் மீது ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தவறுகை போனபைடாக ஏற்பட்டது என்றும் ஆகவே கடந்த 8.8.2022 ல் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையில் மனுதாரருக்கு உண்மையிலேயே உடல்நிலை சரியில்லாமல் போய் இருந்தால் எந்த மருத்துவமனையில் என்ன சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றம் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ சான்றிதலையும் மனுவுடன் ஒப்படைத்திருப்பார் என்றும் நீதிமன்றத்தில் முன்னிலையாகதது போனபைடாக ஏற்பட்டதாகும் என்று

கூறியுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும் இம்மனுதாரர் அசல் தாவாவில் ஏற்கனவே Exparte ஆக உள்ளார் என்றும் மேலும் இம்மனுவுடன் எதிருரை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் எதிர்மனுதாராருக்கு வீண் கஷ்ட நஷ்டம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

வழக்கு ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, எதிர்மனுதாரர் / மனுதாரர்கள், மனுதாரர் மற்றும் இதர நபர்கள் பேரில் விளம்புகை மற்றும் பாகப்பிரிவினை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி அசல் வழக்கு கடந்த 27.4.2012 தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவாவை திருத்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு இ.ம.6/2022 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் மனுதாரரை 8.8.2022 தேதியில் நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராகி உத்தரவிடப்பட்டுள்ளது. பின்னிட்டு மேற்படி மனுவில் மனுதாரர் தரப்பில் கடந்த 8.8.2022 தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்மனுவுரையில் மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் போனதால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என்பதற்கு உரிய மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் மேலும் அசல் தாவாவில் மனுதாரர் Exparte ஆக உள்ளதாகவும், அசல் மனுவில் Exparte ஆனதை தொடர்ந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், இம்மனுவுடன் எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

வழக்கு ஆவணங்கைள ஆராய்ந்து பார்க்கும்போது, எதிர்மனுவுரை தாக்கல் செய்யாத காரணத்திற்கு மனுதாரர் பேரில் தோன்ற தரப்பினராக உத்தரவிடப்படவில்லை

என்பதும் மாறாக நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டும் மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினராகி உத்தரவிடப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேலும், மனுதாரர் இம்மனுவை இ.ம.எண்.6/2022 மனுவிற்கு எதிர் மனு உரையுடன் தாக்கல் செய்யாமல் தோன்றா தரப்பினராகி உத்தரவிடப்பட்டதை மட்டும் ரத்து செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று வாதிடப்பட்டதை பரிசீலிக்கும்போது, இனிமேற்கொண்டு மனுதாரர் பேரில் ஏற்கனவே அசல் தாவாவில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரும் மனு தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இனிமேற்கொண்டு மனுதாரர் இ.ம.எண்.6/2022 மனுவிற்கு எதிர்உரை தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், இயற்கை நீதி கொள்கை அடிப்படையிலும், தரப்பினர்களுக்கு அவர்களது வழக்கை எடுத்துரைக்க உரிய வாய்ப்பு வழங்க வேண்டும் என்று கருதுவதாலும் மனுதாரரின் மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் உத்தேசிக்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 2023ம் வருடம் ஜனவரி மாதம் 31ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2023.02.01 16:56:33 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

1. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:---இல்லை--

2. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:---இல்லை--

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**